DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness -P.W. 15

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முத்துக்குமரன் |
| Father's Name | : | T. சுடலைக்கண் |
| Village | : | கேசவபுரம் |
| Taluk | : | செங்கோட்டை |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 44 |
| Date | : | 13.10.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

13.10.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சுசீந்திரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கு பதிவு செய்த சமயத்தில் நான் களியக்காவிளை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கூடுதல் பொறுப்பாக பளுகல் காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தேன். பளுகல் காவல் நிலையம் களியக்காவிளை காவல் வட்டத்திற்குள் உள்ள ஒரு காவல் நிலையம். 26.11.2023 அன்று மதியம் 12.30 மணிக்கு குழித்துறை அரசு மருத்துவமனையிலிருந்து

வன்னியூர் அஞ்சல், பரக்குன்று, கடையாறவிளை, தங்கையன் மகன் ஜேம்ஸ் பலத்த ரத்தக்காயங்களுடன் இறந்து குழித்துறை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இருப்பதாக கிடைக்கப்பெற்ற Intimation தகவலின்படி 13.00 மணிக்கு குழித்துறை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் சென்று ஜேம்ஸின் பிரேதத்தை பார்த்து, அரசு மருத்துவமனையின் Intimation பெற்று அரசு மருத்துவமனை அருகில் நின்றஜேம்ஸின் மனைவி ஜெயராணி அவர்கள் நடவடிக்கை கேட்டு எடுக்க கொடுத்த புகாரை 14.30 மணிக்கு பெற்று 15.00 மணிக்கு பளுகல் காவல் நிலையம் சென்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023 சட்ட பிரிவு 302, 380 இ.த.ச. படி வழக்கு பதிவு செய்து, அசல் புகார் மனு முதல் தகவல் அறிக்கை, Intimation, ஆகியவற்றை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பர்னதாஸ் SSI 1119 என்பவர் மூலம் குழித்துறை நடுவர் நீதிமன்றம் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை களியக்காவிளை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரணைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 11 அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட Intimation. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 1 புகார் இறந்துபோன ஜேம்ஸின் மனைவியால் என்னிடம் கொடுக்கப்பட்டதுதான். அது வழக்கு பதிவு செய்தது குறித்து எழுதப்பட்டுள்ள குறிப்பு நான் எழுதியதுதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை. **அது அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

மருத்துவமனையிலிருந்து இறப்பு தகவல் காவல் நிலையத்தில் யார் பெற்றது என்றால் எனக்குதான் தகவல் வந்தது. போன் மூலம் கொடுத்தார்களா என்றால் ஆமாம். இந்த தகவல் வரும்போது நான் எங்கு இருந்தேன் என்றால் பளுகல் காவல் நிலையத்தில் இருந்தேன். தகவல் வந்து நான் எவ்வளவு நேரத்தில் நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் அரை மணி நேரத்தில் சென்றேன். நான் எத்தனை மணிக்கு மருத்துவமனை சென்றேன் என்றால் மதியம் 1 மணிக்கு சென்றேன். நான் சென்ற உடனேயே மருத்துவமனையில் ஜேம்ஸின் உடலை பார்த்துவிட்டேனா என்றால் ஒரு ஐந்து நிமிடத்தில் பார்த்துவிட்டேன். இறப்பு தகவல் Intimation ஐ உடலை பார்ப்பதற்கு முன்பு பெற்றேனா அல்லது அதற்கு பிறகு பெற்றேனா என்றால் உடலை பார்த்து ஒரு 20 நிமிடங்களில் பெற்றேன். ஜேம்ஸின் இறப்பு குறித்தான தகவலை நான் பெற்ற பிறகு மருத்துவமனையில் எனக்கு இந்த வழக்கு குறித்து வேறு எந்த பணியும் இருந்ததா என்றால் இல்லை. நான் புகார் பெற்றதாக சொல்வது 14.30 மணி என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் மாலையில் சென்றேன். தற்போது சாட்சி புகாரை பெற்று காவல் நிலையம் செல்லும் வழியில் சம்பவம் இடம் சென்றதாக சொல்கிறார். சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ நடந்த இடத்தை பார்த்துவிட்டுதான் காவல் நிலையம் சென்றேனா என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது நிறைய ஆட்கள் இருந்தார்களா என்றால் ஆமாம்.

**<u>நீதிமன்ற கேள்வி:-</u>**

சம்பவ இடம் என்றால் என்ன என்றால் கொலை நடந்த இடம். கொலை நடந்த இடம் எது என்றால் வீட்டிற்குள் வைத்து நடந்தது. வீட்டிற்குள் பார்த்தேனா என்றால் இல்லை. வீட்டிற்கு வெளியே பார்த்தேன்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

நான் அந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 2 நிமிடம் பார்த்துவிட்டு போய்விட்டேன். என்னுடன் காவலர்கள் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போகும்போது என்ன நேரம் என்றால் மதியம் 2.45 மணியளவில் இருக்கும். மருத்துவமனையிலிருந்து போன் மூலம் தகவல் பெற்றவுடன் சம்பவம் குறித்து ஆய்வாளருக்கோ, வேறு உயர் அதிகாரிகளுக்கோ தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை, புகாரை பதிவு செய்த பிறகு தெரிவித்தேன். நான் யாருக்கெல்லாம் தகவல் தெரிவித்தேன் என்றால் காவல் ஆய்வாளருக்கு போன் மூலம் தெரிவித்தேன். தகவலை தெரிவிக்கும்போது ஆய்வாளர் எங்கிருந்தார் என்றால் களியக்காவிளை காவல் நிலையத்தில் பணியிலிருந்தார். அவருக்கு தகவல் தெரிவிக்கும்போது எத்தனை மணி என்றால் 16.00 மணி இருக்கும். ஆய்வாளர் பளுகல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தவுடன் வந்தாரா என்றால் வந்தார். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் வந்தபிறகு அனுப்பினேனா அல்லது அவர் வருவதற்கு முன்பு அனுப்பினேனா என்றால் வருவதற்கு முன்பு அனுப்பிவிட்டேன். புகாரை யார் எழுதினார் என்று நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஆனால் அவர் யார் என்று

தெரியாது. நான் சொன்ன நேரத்தில் எந்த தகவலும் மருத்துவமனையிலிருந்து பெறவில்லை என்றாலும் நான் சொன்ன நேரத்தில் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் மருத்துவமனையில் வைத்து நான் சொன்னது போல எந்த புகாரும் பெறவில்லை என்றாலும் நான் வெற்றுத்தாளில் அ.சா. 1 டம் கையொப்பம் வாங்கிவிட்டு, பின்னர் காவல் நிலையத்தில் வைத்து ஜோடித்த புகார்தான் அ.சா.ஆ. 1 புகார் என்றால் சரியல்ல. பளுகல் காவல் நிலையத்திற்கும் உதவி ஆய்வாளர் உண்டு என்றால் சரிதான். என்னை உயர் அதிகாரிகளின் நிர்பந்தத்தில் அடிப்படையில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் தற்போது நான் சொல்லியுள்ள நிகழ்வுகளில் நான்சம்பந்தப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை (அரசு தரப்பில்):-</u>**

அன்றைய தினம் நான் என்ன அடிப்படையில் பளுகல் காவல் நிலைய கூடுதல் பொறுப்பை பார்த்து வந்தேன் என்றால் அந்த சமயத்தில் உதவி ஆய்வாளர் பதவி நிரப்பப்படாமல் இருந்தது. அதனால் காவல் துணை கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் அந்த நிலையத்தின் கூடுதல் பொறுப்பை பார்த்து வந்தேன்.

**<u>மறு குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

பொய்யாக ஒரு புகாரை தயாரித்து அதன் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டியிருந்ததால் என்னை ஒரு கருவியாக பயன்படுத்த வேண்டி அந்த நிலையத்திற்கு சம்பந்தமில்லாத என்னை அந்த காவல் நிலையத்தின் பொறுப்பு

அதிகாரியாக இருந்ததாக குறப்பிட்டு இந்த வழக்கை பதிவு செய்ய வைத்துள்ளார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

.